1972 டிசம்பர் 15]

திரு. த. சோனேயா : தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகள் நிலவரி வசூலிப்பதிலே காட்டுகிற அக்கறை வீட்டுவரி வசூலிப்பதிலே காட்டுவதில்லை. அது ஏன் என்று தெரியுவில்லை. கிராம அதிகாரிகள் சில இடங்களில் மறுக்கக் கூடச் செய்கிருர்கள். ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒவ்வொரு பில் கலெக்டரை குறைந்த சம்பளத்தில் நியமித்து, பஞ்சாயத்து வரிகளை வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்வார் களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வரி வசூலிப்பதைப் பொறுத்தவரையில் இரண்டுவிதக் கருத்துக்கள் இருக்கின்றன. கிராம அதிகாரிகள் வசூலிப்பதன் மூலமாகத்தான் நல்ல முறையில் செய்ய முடியும், நடவடிக்கை எடுக்க முடியும் என்ற ஒரு கருத்து இருக் கிறது. அடுத்து, இரண்டு மூன்று கிராமங்களை ஒன்று சேர்த்து, ஒரு பில் கலெக்டர் நியமித்து, வசூலிக்கலாம் என்ற ஒரு கருத்தும் இருக் கிறது. அதைப்பற்றி நிர்வாக சீர்திருத்தக் குழுவினரும் அறிக்கை தரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர்கள். அவர்களுடைய அறிக்கை வந்ததற்குப் பிறகு அரசு அதைப்பற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று இருக்கிறது.

திருவல்லிக்கேணியிலுள்ள கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை

* 186 வின—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள்–நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பெண்கள் கோஷா ஆஸ்பத்திரியில் எத்தனை படுக்கைகள் உள்ளன ?

(இ) அதை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 635.

(இ) ஆம்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, திருவல்லிக்கேணியில் உள்ள கோஷா ஆஸ்பத்திரி சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னதாகக் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இப்பொழுது முன்பிருந்த படுக்கை அளவு மிக அதிகமாக ஆக்கப்படவில்லை. மக்கள் தொகை 5 லட்சமாக முன்பு இருந்தது, 25 லட்சமாக சென்னையிலே

இன்றைக்குப் பெருகியிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, தாய்மார்களுக்கு அதிகமாக வசதிகள் செய்து தரக்கூடிய முறையில் அதை விரிவுபடுத்த அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கே புதிதாக சில மருத்துவமனைப் பகுதிகள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

Premature Baby Unit and a new Ante-Natal Ward with 50 beds at a cost of Rs. 2 lakhs. Another proposal for the construction of a new O.P. Block.

புறநோயாளிகளுக்காக 6 லட்சம் ரூபாயில் கட்டடம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த இடத்திற்குள் எவ்வளவு விரிவுபடுத்த முடியுமோ அந்த அளவிற்கு விரிவுபடுத்து வதற்கான நடைமுறை இருக்கிறது.

மாயூரம் அரசு மருத்துவ மனை

* 187 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது மாயூரம் அரசினர் மருத்துவமனையினை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, விஸ்தரிப்பு இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. புதிய விஸ்த ரிப்புக்கான செயற்குறிப்பு இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இப்பொழுது 32க்கும் அதிகமான படுக்கைகளைக் கொண்ட ஒரு புதிய கட்டடம் கட்டப் படுகிறது என்றாலும், வெளி நோயாளிகளைக் கவனிப்பதற்கான சூழ் நிலையில் அந்த மருத்துவமனை இல்லை என்பதை அரசு அறியுமா? அந்த மருத்துவமனையில் ரத்த சேமிப்பு நிலையம் ஒன்றை உருவாக்கு வதற்கு நீண்டகாலமாக முயற்சி எடுக்கப்பட்டிருந்தும், தேவையான பொருட்கள் கொடுத்தும்கூட, இன்னும் செயல்படுத்தப்படாமல் இருப்பதற்கான காரணத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 32 படுக்கைகள் கொண்ட ஒரு வார்ட் 2 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது. 6 படுக்கைகள் கொண்ட தொத்து